Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 17, 2023

வெள்ளிக்கிழமை மார்ச் 17, 2023 | ஒளி: 08 கதிர்: 231 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



அடுத்த வாரம் தீர்க்கமானது

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சாதகமான பதில் கிடைத்ததையடுத்து, தொழிற்சங்க கூட்டமைப்பு வியாழக்கிழமை (16) காலை தமது தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக கைவிட்டுள்ளது.

அடுத்த வார முற்பகுதியில் தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி விரும்புகிறார் என்று ஜனாதிபதி செயலகம் எழுத்துமூலம் தெரிவித்ததையடுத்து, தாங்கள் வேலைநிறுத்தத்தை நிறுத்தியதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

தொழிற்சங்கத்தின் பங்குதாரர்கள், தமது எதிர்கால தொழிற்சங்க நடவடிக்கை குறித்து கலந்துரையாடுவதற்கும், அவர்களின் செயற்றிட்டத்துக்கான காலவரையறையை நிர்ணயம் செய்வதற்கும் தற்போது கூட்டமொன்றை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

தத்தளிக்கிறது

காசல்ரீ நீர்த்தேகத்துக்கு நீர் வழங்கும் பிரதான ஆறான, கெசல்கமுவ ஓயா நேற்று (16) பிற்பகல் 1.30 மணியளவில் பெருக்கெடுத்தமையால், பொகவந்தலாவையில் தாழ்நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கின. பொகவந்தலாவை சென் மேரிஸ் கல்லூரியில் பல மண்டபங்களை வெள்ளம் சூழ்ந்துகொண்டது. இதனால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

(ரஞ்சித் ராஜபக்ஷ)



அவசர அழைப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து கலந்துரையாட தேர்தலில் போட்டியிடும் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், சுயேட்சைக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு தேர்தல் ஆணைக்குழு எதிர்வரும் 23ஆம் திகதி அழைப்பு விடுத்துள்ளது.

சட்டவிரோதமாக வெளிநாடு

செல்லமுயன்ற 17 பேர் கைது

கனகராசா சரவணன்

சட்டவிரோதமான முறையில், படகொன்றின் மூலமாக வெளிநாட்டுக்குச் செல்லமுயன்றனர் மற்றும் அவர்களுக்கு உதவிகளை புரிந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

அரச அதிகாரிகளின்

கொடுப்பனவுகளை குறைக்க தீர்மானம்

அரச துறை அதிகாரிகளுக்கான உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் அது தொடர்பான செலவுகளை மார்ச் 20 ஆம் திகதி முதல் மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2

அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்கிறது

இலங்கை மத்திய வங்கியால் வியாழக்கிழமை (16) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதத்துக்கு அமைய, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 329 ரூபாய் 02 சதமாகவும் விற்பனை விலை 346ரூபாய் 33 சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

கனடிய உயர்ஸ்தானிகரை சந்தித்தார் சஜித் பிரேமதாஸ

இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வியாழக்கிழமை (16) காலை இடம் பெற்றது.

தொடர்ச்சி P2

2022ஆம் ஆண்டில் இலங்கையின்

பொருளாதாரம் 7.8% ஆல் சுருங்கியது

இலங்கையின் பொருளாதாரம் 2021ஆம் ஆண்டை விட 2022ஆம் ஆண்டில் 7.8 சதவீதத்தால் சுருங்கியுள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

களுத்துறை பிரதேச சபைக்கு

தேர்தல் நடத்த தடை உத்தரவு

களுத்துறை பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்து உயர்நீதிமன்றம், வியாழக்கிழமை (16) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

வேலை நிறுத்தத்தின்போது வேலை செய்த

சுகாதார ஊழியர்களை பாராட்ட பணிப்புரை

வேலை நிறுத்த போராட்டத்துக்கு மத்தியில் புதன்கிழமை (15) கடமைக்கு சமூகமளித்த வைத்தியர்கள் உட்பட சுகாதார ஊழியர்களுக்கு விசேட பாராட்டுகளை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அர்ப்பணிப்புடன் பணியாற்றிய சுகாதார ஊழியர்களுக்கு விசேட சேவைப் பாராட்டுகளை வழங்குமாறு சுகாதார

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சுகாதார செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

பொருளாதாரத்தை பலப்படுத்தாமல் ரூபாயை பலப்படுத்த முடியாது

கடந்த சில நாள்களாக ரூபாயின் பெறுமதி பலமாக காணப்பட்டதாகவும் தற்போது அதன் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா, பொருளாதாரத்தை பலப்படுத்தாமல் ரூபாயை பலப்படுத்த முடியாது என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

நாட்டை வந்தடைந்தது சேற்று உரம்

மூன்று பயிர்ச்செய்கை காலங்களின் பின்னர், சேற்று உரம் என்று அழைக்கப்படும் ரிஎஸ்பி உரத்தை கொண்டுவந்த கப்பல், வியாழக்கிழமை (16) அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

தொடர்ச்சி P2

ரயில் விபத்தில் இருவர் பலி

காலி, கொக்கல உர களஞ்சியசாலைக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் ரயிலுடன் காரொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஆணும் பெண்ணும் உயிரிழந்துள்ளனர் என்று ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியில் இருந்து பெலியத்த நோக்கி பயணித்த கடுகதி ரயிலில் மோதிய குறித்த கார், சுமார் 300 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு கொக்கல விமானப்படை தளத்துக்கு அருகில் உள்ள கடவையில் நின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குங்கள்

அரசாங்கத்திடம் கோரிக்கை

வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்குமாறு கோரி, இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாகன இறக்குமதி தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அதற்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

பயன்படுத்திய வாகன விற்பனை சந்தைக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில், கடன் வட்டி வீதத்தை குறைப்பதாக மத்திய வங்கி ஆளுநர் உறுதியளித்ததாகவும் சங்கம் சுட்டிக்காட்டியது.

பயன்படுத்திய வாகனங்களுக்கான வட்டி குறைக்கப்பட்டால், பயன்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான சந்தையை மேலும் பராமரிக்க முடியும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

குடு சலிந்துவின் தாயை தொடர்ந்து

‘ஹரக் கட்டா’வின் தந்தை ரிட்மனு

‘ஹரக் கட்டா’ என்றழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவின் பாதுகாப்பை சட்டத்துக்கு உட்பட்டு உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் வியாழக்கிழமை (16) ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் மடகஸ்காரில் கைதுசெய்யப்பட்ட ‘ஹரக் கட்டா’, ‘குடு சலிந்து’ என்றழைக்கப்படும் சலிந்து மல்ஷிக உள்ளிட்ட 8 சந்தேகநபர்களும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கை ரயில்வே திணைக்களத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற உதவி இயந்திர பொறியியலாளர் நெல்சன் மெர்வின் விக்கிரமரத்ன எனும் ‘ஹரக் கட்டா’வின் தந்தையால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

31க்குள் சரியான தகவல்களை வழங்குங்கள்

நலன்புரி நன்மைகளை இழக்க நேரிடும் என்கிறார் சேமசிங்க

இம்மாதம் 31ஆம் திகதியுடன் தகவல் கணக்கெடுப்பு முடிவடையும் என்றும் காலக்கெடுவுக்கு முன்னர் சரியான தகவல்களை வழங்கத் தவறினால் நலன்புரி நலன்களை இழக்க நேரிடும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

அடுத்த வாரம் தீர்க்கமானது

தமது நடவடிக்கையை நிறுத்தினாலும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதாகவும், தொடர்ந்து இரண்டாவது நாளாக போராட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது கோரிக்கைகளை சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி செயலாளர் தமக்கு கடிதம் எழுதியுள்ள நிலையில் சில தொழிற்சங்கங்கள் மாத்திரம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டது.

> **சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி செயலாளர் கடிதம் எழுதியுள்ள நிலையில் சில தொழிற்சங்கங்கள் மாத்திரம் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன. பேச்சுவார்த்தையில் உரிய தீர்வு கிடைக்காவிடின் அடுத்தக்கட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு தாங்கள் தயாராகவே இருப்பதாக தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்**

சுகாதாரம், மின்சாரம், எரிசக்தி, கல்வி, துறைமுகங்கள், தபால் சேவைகள் போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 40 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தில் ஈடுபட்டமையால் பொதுமக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

வியாழக்கிழமை (16) காலை வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டு ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ரயில் பற்றாக்குறை காரணமாக பயணிகள் சிரமத்துக்கு உள்ளாகியதாக தெரியவருகிறது.

பேச்சுவார்த்தையில் உரிய தீர்வு கிடைக்காவிடின் அடுத்தக்கட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு தாங்கள் தயாராகவே இருப்பதாக தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கனடிய உயர்ஸ்தானிகரை சந்தித்தார் சஜித் பிரேமதாஸ

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பாக இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக ஜனநாயகத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் சட்டவாக்கம் நிறைவேற்றதிகாரம், நீதித்துறை ஆகிய மூன்று தூண்களிலும் நிலவும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் செயல்முறையை ஜனநாயகமயமாக்கல் போன்ற விடயங்களும் இங்கு கருத்தில் கொள்ளப்பட்டன.

தேர்தல் நடத்த தடைஉத்தரவு

முன்னாள் அமைச்சர் குமார வெல்கமவின் தலைமையில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட நவ லங்கா நிதஹஸ் பக்ஷய (புதிய லங்கா சுதந்திரக் கட்சி) சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவின் இறுதித் தீர்மானம் வரை இந்த உத்தரவு அமலில் இருக்கும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரேசேகர, ஜனக டி சில்வா ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனைகள் இருந்தால் இரண்டு வாரங்களுக்குள்ளும், அதற்கான எதிர் ஆட்சேபனைகளை 2 வாரங்களுக்கு பின்னர் மனுதாரர்களும் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவித்த நீதிமன்றம், பரிசீலனையை மே 12ஆம் திகதிக்கு நிர்ணயித்தது.

களுத்துறை பிரதேச சபைக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து நவ லங்கா நிதஹஸ் பக்ஷயவின் பொதுச் செயலாளர் திலக் வராகொட மற்றும் அதன் களுத்துறைக்கான அங்கிகரிக்கப்பட்ட முகவர் செனல் வெல்கம ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

தேசிய தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட தரப்பினர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

கொடுப்பனவுகளை குறைக்க தீர்மானம்

நாட்டிலிருந்து வெளியேறும் பெருமளவிலான அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் நோக்கில், அமைச்சர்கள், ஆளுநர்கள், எம்.பிக்கள் உள்ளிட்டோரும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுவை வழிநடத்தும் அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளின் பேரில் வழங்கப்படக்கூடிய 750 அமெரிக்க டொலர் பொழுதுபோக்கு கொடுப்பனவை முற்றாக இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயிற்சி, கலந்துரையாடல்கள், மாநாடுகள், கல்வி போன்ற திறன் மேம்பாடு தொடர்பான வெளிநாட்டுப் பயணங்களின் போது நாளொன்றுக்கு 40 அமெரிக்க டொலர் வீதம் 30 நாள்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை நாளொன்றுக்கு 25 அமெரிக்க டொலர் வீதம் 15 நாள்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சார்பில் உத்தியோகபூர்வ பணிகளுக்காக அல்லது ஏனைய வெளிநாட்டு விவகாரங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது நாளொன்றுக்கு 75 அமெரிக்க டொலர் வீதம் அதிகபட்சமாக 15 நாள்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

அதை, அதிகபட்சம் 10 நாள்களுக்கு நாளொன்றுக்கு 40 டொலராக குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அறியமுடிகிறது.

மேலும், ஐந்து பிரிவுகளின் கீழ் முதல் மற்றும் இரண்டாவது வகை நாடுகளுக்கு வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளையும் 30 சதவீதம் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டை வந்தடைந்தது சேற்று உரம்

இந்தக் கப்பலில் 36,000 மெட்ரிக் தொன் உரம் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மற்றுமொரு கப்பலும் எதிர்வரும் நாள்களில் நாட்டை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் யுஎஸ்எயிட் நிறுவனத்தின் உதவியின் கீழ், குறித்த ரிஎஸ்பி உரம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த உரத் தொகையை நாட்டிலுள்ள 12 இலட்சம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதற்கிணங்க, ஒரு ஹெக்டேயருக்கு 55 கிலோ கிராம் உரம் விநியோகிக்க உள்ளதாகவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் குறித்த உரத்தை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்தது.

ரயில் விபத்தில் இருவர் பலி

காலியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக குறித்த பெண் சென்றுள்ளதுடன், வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மீன் வாங்குவதற்காக ரயில் கடவையால் வீதியைக் கடந்த போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

> **காலியில் தனியார் வைத்தியசாலைக்கு குறித்த பெண் சென்றுள்ளதுடன், வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மீன் வாங்குவதற்காக ரயில் கடவையால் வீதியைக் கடந்த போதே விபத்து சம்பவித்துள்ளது**

உயிரிழந்த இருவரும் அஹங்கம, வல்ஹெங்கொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளதுடன், குறித்த பெண், காரை செலுத்திச் சென்ற நபரின் உறவினர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது ரயிலில் மோதுண்டு இழுத்துச் செல்லப்பட்ட காரில் சிக்கிய இருவரும் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்ட பின்னர், சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சுகாதார ஊழியர்களை பாராட்ட பணிப்புரை

அவர்களுக்கு தொழில்சார் மட்டத்திலான பாராட்டுகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை பெற்று அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார செயலாளருக்கு அமைச்சர் பணித்துள்ளார்.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ள நியாயமற்ற வரி கொள்கை, வங்கி வட்டி வீதத்தை குறைத்தல், வாழ்க்கைச் செலவு நிவாரணத்தை வழங்குதல், மின்சார கட்டணத்தை குறைத்தல் ஆகிய கோரிக்களை முன்வைத்து புதன்கிழமை வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையைச் சேர்ந்தோரும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற காரணத்தால் வைத்தியசாலைகளுக்கு சென்ற நோயாளிகள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரத்தை பலப்படுத்தாமல் ரூபாயை பலப்படுத்த முடியாது

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் கூட்டமைப்பு அலுவலகத்தில் வியாழக்கிழமை (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாத பட்சத்தில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் இம்மாதத்தின் பின்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்தும் திறன் ஜனாதிபதிக்கு இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

2025 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதிக்கு அந்தப் பதவியில் இருக்க முடியும் என்பதால், தேவைப்பட்டால் புதிய பாராளுமன்றத்தில் இருந்து சர்வகட்சி அரசாங்கத்தை அழைக்க முடியும் என்றும் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வேலைநிறுத்தங்கள் தொடருமானால் அது நாட்டின் பொருளாதாரத்தை கடுமையாகப் பாதிக்கும் என்றும் வருமானத்தை அதிகரிப்பதுடன் மக்களின் பிரச்சினைகளிலும் அரசாங்கம் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

3க்குள் சரியான தகவல்களை வழங்குங்கள்

நாடளாவிய ரீதியில் உள்ள 334 பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்பட்ட 11 இலட்சம் நலன்புரி நல விண்ணப்பங்களின் சரிபார்ப்பு நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

334 பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்பட்ட 3.7 மில்லியன் விண்ணப்பங்கள் நலன்புரி கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியானவையா என்பதை சரிபார்க்கும் நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

1.1 மில்லியன் நலன்புரி உதவி விண்ணப்பங்களில் களுத்துறை மாவட்டத்தில் 46 சதவீதமும் பதுளை மாவட்டத்தில் 34 சதவீதமும் காலி மாவட்டத்தில் 32 சதவீதமுமாக அதிகபட்ச சரிபார்ப்பு விகிதம் காணப்படுவதாக தெரிவித்தார்.

மேலும், மார்ச் 31ஆம் திகதி காலக்கெடு நிறைவடைவதற்கு முன்னர் சரியான தகவல்களை வழங்கத் தவறினால் நலன்புரி நலன்களை இழக்க நேரிடும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே, அனைத்து விண்ணப்பதாரர்களும் தகவல் கணக்கெடுப்பு நடத்தும் அதிகாரிகளுக்கு சரியான தகவல்களை வழங்குமாறு இராஜாங்க அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்க டொலரின் பெறுமதி உயர்கிறது

டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 327 ரூபாய் 59 சதமாகவும் விற்பனை விலை 344 ரூபாய் 66 சதமாகவும் புதன்கிழமை (15) பதிவாகி இருந்தது.

மார்ச் 1ஆம் திகதிமுதல் அதிகரித்து வந்த ரூபாயின் பெறுமதி மார்ச் 10ஆம் திகதி முதல் குறைந்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

பொருளாதாரம் 7.8% ஆல் சுருங்கியது

தேசிய கணக்கு மதிப்பீடுகள் குறித்து திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் 13,037,934 மில்லியன் ரூபாயாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2022ஆம் ஆண்டில் 12,017,849 மில்லியன் ரூபாயாக குறைவடைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2,917,721 மில்லியனில் இருந்து 2021 ஆம் ஆண்டில் 3,331,073 மில்லியன் ரூபாயாக பதிவு செய்யப்பட்டு, 12.4 சதவிகிதம் எதிர்மறையான சதவீதத்தைப் பதிவு செய்ததுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் முறையே 4.6 சதவீதம், 16.0 சதவீதம் மற்றும் 2.0 சதவீதம் குறைந்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை ரூபாயின் பெறுமதியானது குறிப்பிடத்தக்க வீதத்தில் வீழ்ச்சியடைந்தமை உட்பட காரணிகளால் உள்நாட்டில் அதிகூடிய பணவீக்கத்தை ஏற்படுத்திய விலை சீர்திருத்தங்களின் விளைவாக 2022 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரம் மெதுவான செயற்றிறனைப் பதிவு செய்தாக குறிப்பிடப்படுகிறது.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுயன்ற 17 பேர் கைது

மட்டக்களப்பில் கடலின் ஊடாக செல்வதற்கு வீடு ஒன்றில் தங்கியிருந்த முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த 3 சிறுவர்கள் 5 பெண்கள் 8 ஆண்கள் மற்றும் அவர்களுக்கு உதவி புரிந்துவந்த ஒருவர் உட்பட 17 பேரை புதன்கிழமை (15) இரவு மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவினர் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சுவிஸ்கிராமத்திலுள்ள வீடு ஒன்றை சம்பவ தினத்தன்று இரவு 7 மணியளவில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் சுற்றிவளைத்தனர்.

இதன் போது சட்டவிரோத ஆள்கடத்தல் மாபியாவைச் சேர்ந்த ஒருவர் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த 16 பேரிடம் பணத்தை வாங்கி கொண்டு, மட்டக்களப்பு கடலில் இருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாக தெரிவித்து அவர்களை அழைத்துவந்து மட்டக்களப்பு சுவிஸ்கிராமத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்று அங்கு கடந்த ஒரு மாதகாலமாக தங்கவைத்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது

இதில் 3 சிறுவர்கள் 3 கர்ப்பிணி பெண்கள் உட்பட 5 பெண்கள் 8 ஆண்கள் மற்றும் அவர்களுக்கு வீடு வாடகைக்கு பெற்றுக் கொடுத்து உதவிபுரிந்துவந்த ஒருவர் உட்பட 15 பேரை கைது செய்ததுடன் படகு மூலம் செல்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டு வைத்திருந்த சமபோஷா, பிஸ்கற் பக்கற்கள், சீனி போன்ற பொருட்கள் மற்றும் ஆடைகளையும் மீட்டு ஒப்படைத்துள்ளதாகவும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு நாயின் பாசப்போராட்டம்

எச்.எம்.எம்.பர்ஸான்

வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் ஒன்று தனது எஜமானர் மரணமடைந்த நிலையில், சடலத்தை நல்லடக்கம் செய்வதற்காக எடுத்துச் சென்றபோது, வீட்டிலிருந்து மயானம் வரை அழுதுகொண்டே சென்ற சம்பவம் பதிவாகி உள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணையடி பகுதியிலேயே இச்சம்பவம் பதிவாகியுள்ள,

அந்த நாயை வளர்த்து வந்த மூதாட்டி புதன்கிழமை (15) மரணமடைந்துள்ளார். மூதாட்டி மரணமடைந்ததை உணந்து கொண்ட நாய் கண்ணீர் சிந்தி மூதாட்டியின் உடல் அருகிலேயே நின்றுள்ளது.

மரணமடைந்த மூதாட்டியின் உடல் அவரது மகளின் வீட்டிலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிண்ணையடி இந்து மயானத்தில் வியாழக்கிழமை (16) நல்லடக்கம் செய்யப்பட்டது.

மூதாட்டியின் இறுதிக் கிரியையில் மக்களோடு சேர்ந்து நீண்ட தூரம் பயணித்த நாய் பட்டாசு சப்தத்தையும் பொருட்படுத்தாமல் கண்களில் கண்ணீர் வடிந்திருக்க தனது சோகத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நல்லடக்கத்தின் பின்னர் மீண்டும் நாய், மூதாட்டி வசித்த இடத்திற்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"தேர்தல் மைய அரசியலால்

நாடு குட்டிச்சுவரானது"

–முஷரப் எம்.பி

■ வீரி சகாதேவராஜா

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் தேர்தல் மைய அரசியலைச் செய்து வருவதால், நாடு குட்டிசுவராக மாறி இருக்கின்றது. இதிலிருந்து மீள வேண்டுமாக இருந்தால், தேசத்தை மையமாக வைத்து, தேச மைய அரசியலை செய்து, அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை கட்டி எழுப்ப வேண்டும் என்று அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான எஸ்.எம். எம் முஷரப் தெரிவித்தார் .

காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், ஐந்து வருடங்களுக்கு பிற்பாடு புதன்கிழமை (15) காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் வழிகாட்டலில் முஷரப் எம்.பி தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது .

இந்தக் கூட்டத்தில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் பி. இராஜதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் .

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேலும் பேசுகையில் கூறியதாவது: அபிவிருத்திக்கு முன்னர், இனங்களிடையே பரஸ்பரம் ஒற்றுமை நிலவ வேண்டும். பிரச்சினைகளை விடுத்து, தீர்வை வழங்கக்கூடிய எதையும் செய்ய வேண்டும். சகல இனங்களும் தேச அபிமானத்துடன் வாழ்ந்தால், இந்தப் பிரச்சினைகளில் இருந்து மீளலாம். தேச மைய அரசியல் வேண்டும். தேர்தலுக்காக இனவாதத்தை பேசி, அரசியல் செய்வதால் நீண்ட காலமாக பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. பிரச்சினைகளைப் பேசிப் பேசி காலம்கடத்தாமல் தீர்வை நோக்கி நகர வேண்டும். பைத்தியக்காரன் கத்துகின்றான் என்பதற்காக, அதற்கு சிகிச்சை செய்கின்ற வைத்தியரும் கத்த முடியாது. ஆனால், சில இடங்களில் பைத்தியக்காரனும் கத்துகிறான்; வைத்தியரும் கத்துகிறார். எனவே, நாங்கள் பிரச்சினையை பேசிப் பேசி காலத்தை கடத்தாமல், தீர்வை நோக்கி கூட்டங்களை நடத்த வேண்டும் என்றார்.

100 பெண்களுக்கு கௌரவம்

மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பால் எற்பாடு செய்யப்பட்ட, திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள பல்துறை ஆளுமையுள்ள 100 பெண்களைப் பாராட்டி, கௌரவித்து, சான்றிதழ் வழங்கும் விழா, புதன்கிழமை (15) திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த அமைப்பின் பிரதி தலைவர் கலாநிதி எப்.எம் ஷரீக் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எக்.இ.எம். டபிள்யூ.ஜி திஸாநாயக பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண விளையாட்டு பணிப்பாளர் என்.எம் நௌபீஸ், திருகோணமலை மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி என் நவநீதனா, ஒச்சிட் அழகுக்கலை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கே. சர்மிலா, தையல் பயிற்சி ஆசிரியை திருமதி எம்.எஸ்.வி நசீரா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர். (அபு அலா)

விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயம்

■ செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியின் அச்சுவேலி, நாவல்காடு பகுதியில் நேற்று (16) மதியம் 11 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

நாவல்காட்டு பகுதியில் ஹயஸ் வாகனம் பிரதான வீதிக்கு நுழைய முற்பட்ட பொழுது, யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து ஹயஸ் வாகனத்தின் பின்பக்கம் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஆவரங்கால் பகுதியை சேர்ந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் பின் இருக்கையில் அமர்ந்து சென்ற இரண்டு இளைஞர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

> நாவல்காட்டு பகுதியில் ஹயஸ் வாகனம் பிரதான வீதிக்கு நுழைய முற்பட்ட பொழுது, யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டில் இருந்து ஹயஸ் வாகனத்தின் பின்பக்கம் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது

ஆவரங்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த கயன்சன் வயது 21, நிஷாந்தன் வயது 17 ஆகியோரே காயங்களுக்கு உள்ளாகினர்.

விபத்துடன் தொடர்புடைய ஹயஸ் வாகனத்தின் சாரதி அச்சுவேலி போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் தொழிற்சந்தை

■ செ. கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிற்றுறையில் வழிகாட்டிடும் நோக்கில் நேற்று (16) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் தொழிற்சந்தை நடைபெற்றது.

இந்தத் தொழிற்சந்தை திறப்பு நிகழ்வினை மாவட்ட அரசாங்க அதிபர்க.விமலநாதன் திறந்து வைத்தார்.

UOULEAD, Federal Ministry of Economic Cooperation and Development , Child Fund Sri Lanka, Voice, ORHAN, BERENDINA நிறுவனங்களின் அனுசரணையிலும் மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் ஒழுங்கமைப்பிலும் இந்தத் தொழிற்சந்தை இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 59,103 மெற்றிக் தொன் நெல் அறுவடை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால போகத்தில் 59,103 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப் பாசன குளமான இரணைமடுக் குளம் உள்ளிட்ட நடுத்தர மற்றும் சிறிய நீர்ப் பாசன குளங்களின் கீழும் மானாவாரி பயிர் செய்கை நிலங்களின் கீழும் இம்முறை மொத்தமாக 26,582 ஹெக்டேயர் நிலப்பரப்பில் காலப்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில், அறுவடை செய்த நெல்லை விவசாயிகள் மிகக் குறைந்த விலையிலேயே விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர்ந்தும் நெல்லுக்கான உரிய விலை கிடைக்காமையால், விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலையில்

'காலாறப் போனவள்' நூல் அறிமுக விழா

■ அ. அச்சுதன்

கவிஞர் லலித கோபன் எழுதிய 'காலாறப் போனவள்' கவிதை நூல் அறிமுக விழா, ஓய்வு நிலை கோட்ட கல்விப் பணிப்பாளர் சீ. மதியழகன் தலைமையில், திருகோணமலை நகர சபை பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம அதிதியாக, 'மகுடம்' சஞ்சிகையின் ஆசிரியர் வி. மைக்கல் கொலினும், சிறப்பு அதிதியாக 'நீங்களும் எழுதலாம்' கவிதை சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். ஆர் தனபாலசிங்கமும், கௌரவ அதிதிகளாக திருகோணமலை உயர் தொழில்நுட்ப வளாகத்தின் ஆங்கிலத்துறை தலைவர் மா. தமிழ்ச்செல்வன், ஆங்கில விரிவுரையாளர் த. ஜீவகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் பற்றிய உரைகளை கவிஞர்களான றியாஸ் குரானா, சி. கருணாகரன், க . டனிஸ்கரன் விமர்சகர்களான சுதர்மமகாராஜன், வ. முரளிதரன் ஆகியோர் வழங்குவார்கள்.

பாராளுமன்றம் 4 நாள் கூடுகிறது

பாராளுமன்றத்தை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கூட்டுவதற்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் வியாழக்கிழமை (16) கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாகப் பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் டிக்கிரி கே.ஜயதிலக தெரிவித்தார்.

இதற்கமைய பாராளுமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு கூடவுள்ளதுடன், மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சட்டக்கல்விப் பேரவை கட்டளைச் சட்டத்துக்காக வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட விதிகள் விவாதமின்றி அங்கிகரிக்கப்படவுள்ளன.

இதன் பின்னர் பி.ப 10.30 மணி முதல் பி.ப 5 மணி வரை பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் விசாரிப்பதற்கும் அது தொடர்பில் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல் பற்றிய தீர்மானம் அங்கிகரிக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

வருடாந்த பொதுக்கூட்டம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் 32ஆவது வருடாந்த பொதுக்கூட்டம், எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மாலை மூன்று மணி முதல் ஆறு மணி வரை, இலக்கம் 120/15, விஜேராம மாவத்தை, கொழும்பு - 07இல் உள்ள என்ஜினியர்ஸ் இன்ஸ்ரிரியூட் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் பங்குபற்றுவதற்கான நுழைவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக, சங்கத்தின் பொதுச்செயலாளர் பிரியாத் கப்ராலுடன் 0777 560 708 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சங்கத்தின் இணையத்தள முகவரி: www.aaupcc.org.

புனித ரமழான் சிறப்பு நிகழ்ச்சி

■ எம்.எஸ்.எம் ஸாகிர்

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு ஸ்டார் தமிழ் தொலைக்காட்சியில் இப்தார் சிறப்பு நிகழ்ச்சி மாலை ஆறு மணி முதல் ஒளிபரப்பாகும்.

கிராத், ரமழான் சிறப்புரை, கஸீதா, நபிமொழி, மஃரிப் தொழுகைக்கான அதான், குத்பா பிரசங்கம், இஸ்லாமிய கீதங்கள் என்பவற்றுடன் மேலும் பல அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்நிகழ்ச்சி ஒளிபரப்பாக உள்ளது.

> கிராத், ரமழான் சிறப்புரை, கஸீதா, நபிமொழி, மஃரிப் தொழுகைக்கான அதான், குத்பா பிரசங்கம், இஸ்லாமிய கீதங்கள் என்பவற்றுடன் மேலும் பல அம்சங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது

உதவிக்கரம் நீட்டியது பாகிஸ்தான்

ஏழை குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டும் முகமாக, பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்குவதற்கான உலருணவு பொதிகளை வழங்கிவைத்தார்.

மருதானை சிறிய மஸ்ஜித் /இலங்கை நலன்புரி நிவாரண சங்கத்தின் பிரதிநிதிகளிடம் உலருணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. பாகிஸ்தான் எப்போதுமே இலங்கைக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் உதவி வழங்க தயாராக இருக்கிறது என்று பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

ஊழல்கள் பற்றி பொதுவெளியில் எழுதிய சமூக ஆர்வலர்களுக்கு

கல்முனை மேயர் மானநஷ்ட இழப்பீட்டு கோரிக்கை

கல்முனை மாநகர மேயரை ஊழலுடன் தொடர்புபடுத்தி, கல்முனை மறுமலர்ச்சி மன்ற தலைவர் நஸீர் ஹாஜி என அறியப்படும் அச்சு முஹம்மது முஹம்மது நசீர் மற்றும் மருதமுனையை சேர்ந்த சமூக செயற்பாட்டளர் செய்னூலாப்தீன் நௌஷாட் ஆகியோருக்கு கல்முனை மாநகர மேயர் ஏ.எம். றக்கீப் சார்பில், மான நஷ்ட இழப்பீட்டு கோரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேயரின் சார்பில் சட்டத்தரணி சீ.ஐ. சஞ்சித் அஹமட் அனுப்பி வைத்துள்ள கோரிக்கை கடிதத்தில், நஸீர் முஹம்மட் என்ற உமது முகநூல் பக்கத்திலும், 03.03.2023 ம் திகதி அன்று எழுதப்பட்டு அச்சடிக்கப்பட்டு பகிரங்க இடமான மருதமுனை, கல்முனை பள்ளிவாசல்களில் விநியோகிக்கப்பட்ட 'கல்முனை வாழ் நகர் மக்களே நாம் எப்போது விழிப்பது ? கண்கெட்ட பின்தான் சூரிய நமஸ்காரமா? வெட்கம், அவமானம் கோடிகளில் ஊழல், கொள்ளை, ஏன் இன்னும் உறக்கம்' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் கூறியுள்ள விடயத்தை 07.03.2023 ஆம் திகதி 'தாறுஸ் ஸபா' என்ற முகநூல் ஊடகத்தில் அளித்த செவ்வியில் உறுதிப்படுத்தி உள்ளீர் .

இதன் மூலமாக எனது கட்சிக்காரர், இதுவரை கட்டிக்காத்து வந்ததும் சமூகத்தில் அவருக்கு இருந்த புகழ், கீர்த்தி, நற்பெயர் என்பவற்றிக்கு களங்கம் விளைவித்துள்ளதால் உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார் . இதனால் அவருக்கு ஏற்பட்ட இழப்பாக 300 மில்லியன் என அவர் கணிப்பீடு செய்துள்ளார். எனவே மேற்குறித்த இழப்பீட்டை இரண்டு கிழமைகளுக்குள் செலுத்த வேண்டுமென இந்தால் கோரிக்கை விடுக்கின்றேன். தவறின் உமக்கு எவ்வித அறிவித்தலுமின்றி தகுதிவாய்ந்த நீதிமன்றில் வழக்கிடவும் மேலும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற மற்றுமொரு கடிதம் மருதமுனையை சேர்ந்த சமூக செயற்பாட்டளர் செய்னூலாப்தீன் நௌஷாட் என்பவருக்கும் அதே சட்டத்தரணி மானநஷ்ட இழப்பீட்டு கோரிக்கை கடிதத்தை அனுப்பியுள்ளார். இவருடைய நடவடிக்கைகளால் 100 மில்லியன் இழப்பீடும் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட கல்முனை மறுமலர்ச்சி மன்ற தலைவர் நஸீர் ஹாஜி மற்றும் மருதமுனையை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் செய்னூலாப்தீன் நௌஷாட் ஆகியோர், உயிருள்ளவரை இலஞ்சம், ஊழல், அதிகார மோசடிக்கு எதிராக போராடுவோம் என்றும் இந்தக் கோரிக்கை கடிதத்தை பற்றி அலட்டிக் கொள்ளவில்லை என்றும் மக்களின் சொத்தை பாதுகாக்க எதுவித நடவடிக்கைகளையும் எதிர்கொள்ள தயாரெனவும் தெரிவித்தனர்.

குச்சவெளி – ஜாயாநகர் அல்–இக்றாமுன்பள்ளி மாணவர் வரவேற்பும், மாணவர் விடுகை விழாவும் திங்கட்கிழமை (13) குச்சவெளி பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் வித்தியாலய அதிபர் எம்.எச்.எம் சாபிர் தலைமையில் நடைபெற்றது.

(படங்கள்: அ. அச்சுதன்)

அம்பாறையில் ஒதுவார்களை

ஒன்றிணைத்து திருவாசகம் வழங்கல்

■ வீரி சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருமுறைகளை ஓதும் ஓதுவார்களை ஒன்றிணைப்பதுடன், அவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுதல் அவர்களுக்கான அங்கிகாரம், ஆற்றுப்படுத்தும் வகையில் அமைந்த நிகழ்வு காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஓதுவார்களுக்கான திருவாசகம் நூல் வழங்கிவைக்கப்பட்ட இந்நிகழ்வு, காரைதீவு பிரதேச செயலாளர் சி. ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது. ஆன்மிக அதிதியாக நாவிதன்வெளி ஸ்ரீமுருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சுபாஷ்கர சர்மா, சிறப்பு அதிதிகளாக இராவணா அறக்கட்டளையின் தலைவர் நா. சனாதனன், சைவப்புலவர் யோ. கஜேந்திரா, புண்ணியமலர் அம்மா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மருதமுனை ஷம்ஸிற்கு

'மருதூர் கொத்தன்' கலையரங்கம் கையளிப்பு

■ ஏ.எல்.எம் ஷினாஸ்

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு சுமார் மூன்று மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 'மருதூர் கொத்தன்' கலையரங்கத்தை உத்தியோகபூர்வமாக பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு, பாடசாலையின் அதிபர் எம். எம் ஹிர்பகான் தலைமையில் புதன்கிழமை (15) நடைபெற்றது.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும் 'மருதூர் கொத்தன்' எனும் புனைப்பெயரில் இலக்கிய உலகத்தில் வலம் வந்த இலக்கியவாதியுமான மர்ஹூம் வி. எம் இஸ்மாயில் நினைவாக, இந்த 'மருதூர் கொத்தன்' கலையரங்கம் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. கலையரங்கத்தை மர்ஹூம் வி. எம் இஸ்மாயிலுடைய புதல்வர் பொறியியலாளர் ஆரிப் இஸ்மாயில் திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளராக கலீஸ் நியமனம்

■ வீரி சகாதேவராஜா

அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சாலிஹ் அபுல் கலீஸ், புதன்கிழமை (15) தொடக்கம் கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனை அல்ஹம்றா மகாவித்தியாலயம், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி போன்றவற்றின் பழைய மாணவரான அபுல் கலீஸ், கிழக்கு பல்கலைக்கழகத்தில் 1989களில் விவசாய விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

அம்பாறை மாவட்ட விவசாய விரிவாக்கல் பகுதியின் உதவி மாவட்ட பணிப்பாளராக 1992இல் முதல் நியமனம் பெற்ற இவர், விவசாய துறைசார்ந்த பல்வேறு நிறுவனங்களில் உயர்பதவி வகித்து, 2017ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்துக்கான விவசாய பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற நிலையில், 2020 -21 காலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட பதில் விவசாய பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

இவர், இந்தோனேசியா, சீன, மலேசியா, தென்கொரியா போன்ற நாடுகளில் பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதுடன், 20க்கும் மேற்பட்ட விவசாய நூல்கள், பிரசுரங்கள், வெளியீடுகள் போன்றவற்றை வெளியிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று கிழக்கு

சமுர்த்தி வங்கி புதிய இடத்தில்

■ எம்.எல்.எஸ் டீன்

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மீராநகரில் இயங்கி வந்த கிழக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி காரியாலயம், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக, நீரில் மூழ்கியதால், இந்த வங்கியானது அக்கரைப்பற்று சின்ன மௌலானா வீதி, நகர்ப் பிரிவு இரண்டில் புதிய இடத்துக்கு மாற்றம் செய்து, திறந்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹுசைன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி காரியாலய திறப்பு விழாவில் பிரதம அதிதிகளாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம் சப்றாஸ், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்சார் ஆகியோர் கலந்து கொண்டு வங்கியை திறந்து வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில்

பாரிய குறைபாடுகளுடன் இயங்கும் சுகாதாரத்துறை

உலகவங்கியின் ஒரு தொகுதி நிதியும் வேறு மாவட்டத்துக்கு திருப்பப்பட்டது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 72க்கும் மேற்பட்ட மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு, மருத்துவர்கள் மேற்படிப்புக்காக செல்லுதல், மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான விடுதி பற்றாக்குறை, அம்புலன்ஸ் உள்ளிட்ட வாகன உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை, வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மின் பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளமை எனப் பல்வேறு நெருக்கடிகளால் சுகாதாரத் துறையை முன்னெடுத்துச் செல்வதில், பாரிய சிக்கல்கள் ஏற்பட்டு இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் என். சரவணபவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்கான முன்னாயத்த கூட்டம், செவ்வாய்க்கிழமை (14) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போது, மாவட்டத்தின் சுகாதாரத் துறையை முன்னெடுப்பதிலுள்ள சவால்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே டொக்டர் என். சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 72 இற்கும் மேற்பட்ட மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக, சத்திர சிகிச்சையின் போதும் காயங்களுக்கும் பயன்படுத்தும் பிளாஸ்டர்கள் இல்லை என்றும் மாவட்ட பொதுவைத்திய சாலையிலுள்ள பிரேத அறையின் குளிரூட்டி பழுதடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து குறிப்படுகையில், மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள், மேற்படிப்புக்காக வெளிநாடு செல்வதால், மருத்துவர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதுடன் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான விடுதி பற்றாக்குறை, அம்பியுலன்ஸ் உட்பட சுகாதாரத்துறை சார்ந்த வாகனங்களின் உதிரிப் பாகங்களுக்கான தட்டுப்பாடும் காணப்படுகின்ற நிலையில், மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளமையால் பல்வேறு நெருக்கடிகளும் காணப்படுகின்றன.

இந்த ஆண்டில், சுகாதாரத்துறையின் அபிவிருத்தி வேலைகளுக்காக உலக வங்கியால் கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 210 மில்லியன் ரூபாய் நிதியில் 50 மில்லியன் ரூபாய் நிதி வேறு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளதால் வைத்திய துறைக்கான கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலையேற்பட்டுள்ளது

குறிப்பாக, வேரவில் வைத்தியசாலைக்கான போக்குவரத்து பாதை சீரின்மையால் அடிக்கடி வாகனங்கள் பழுதடையும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புத்தூர் விவசாயிகளுக்கு சீன டீசல்

■ செந்தூரன் பிரதீபன்

சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட டீசல், புத்தூர் கமநல சேவை பிரிவுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக, இந்த எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டது. ஓர் ஏக்கருக்கு ஆறு லீற்றர் என்ற அடிப்படையில், 600 விவசாயிகளுக்கு டீசல் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்ட காதி நீதவானாக நியமனம்

■ மன்னார் நிருபர்

மன்னார் மாவட்ட காதி நீதவானாக, மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசல் பிரதான மௌலவி செய்னுல் ஆப்தீன் அஸீம் நியமனம் பெற்ற நிலையில் புதன்கிழமை (15) மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், மன்னார் புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் மன்/மூர்வீதி ஜும்மா பள்ளிவாசல் பிரதான மௌலவியாகவும் மன்னார் மாவட்ட உலமா சபையின் உபதலைவராகவும் பதவி வகிக்கின்றார்.

நீதவான் முன்னால் பெண் மீது தாக்குதல்

14 நாள்கள் விளக்கமறியல்

■ செந்தூரன் பிரதீபன்

> அச்சுவேலி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை, இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது, எதிராளி சாட்சி அளித்துவிட்டு வரும்பொழுது, சந்தேநபர் கன்னத்தில் அறைந்து உள்ளார்

வழக்கு இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது, எதிராளியைத் தாக்கிய நபரை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதவான் உத்திரவிட்டார்.

அச்சுவேலி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை, இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது, எதிராளி சாட்சி அளித்துவிட்டு வரும்பொழுது, சந்தேநபர் கன்னத்தில் அறைந்து உள்ளார். நீதவான் முன்னால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உடனடியாக அச்சுவேலி பொலிஸாருக்கு, குறித்த நபருக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல், நீதிமன்றத்தை அவமதித்தல் போன்ற குற்றச்சாட்டின் கீழ் வழக்கு பதிவு செய்யுமாறு நீதவான் கட்டளை இட்டதுடன் சந்தேக நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.

ஆவரங்கால் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபருக்கே இவ்வாறு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குறித்த நபருக்கு எதிராக பல வழக்குகள் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருவதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர், பக்கத்து வீட்டு பெண்ணுடன் காதல் வயப்பட்ட பின்னர் ஏற்பட்ட மனஸ்தாபத்தால், குறித்த பெண்ணுக்கு தொடர்ச்சியாக துன்புறுத்தல் கொடுத்து வந்ததாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

சிவபுரம் இளைஞர்கள், சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுக்குள் கொண்டு வந்தனர்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பரந்தன், சிவபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் இணைந்து, சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள், போதைப்பொருள் பயன்பாடு உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் வீதிகளைப் புனரமைத்தல், பொது இடங்களை துப்புரவு செய்தல் போன்ற செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருவதை பலரும் பாராட்டி வருகின்றனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சிவபுரம் பகுதியில், கடந்த காலங்களில் அதிகரித்த போதைப் பொருள் பாவனை, கசிப்பு உற்பத்தி - விற்பனை, சிறுவர் துஸ்பிரயோகங்கள், குடும்ப வன்முறைகள் என்பன அதிகரித்து காணப்பட்டதுடன் குறித்த கிராமத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட கொலை சம்பவங்களும் 19 க்கும் மேற்பட்ட வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இந்தநிலையில், குறித்த பகுதியில் கிராம அலுவலரின் முயற்சியால் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர், பொலிஸாரின் உதவியுடன் கசிப்பு உற்பத்தி - விற்பனை, போதைப்பொருள் பாவனை என்பவை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. அத்துடன், குறித்த குழுவினர் பல்வேறு சமூகநல பணிகளையும் முன்னெடுத்து வருகின்றனர். அந்தவகையில், குன்றும் குழியுமாகக் காணப்பட்ட வீதிகளை செப்பனிடும் பணிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கண்புரை இலவச சத்திர சிகிச்சைக்கு பெயர்பதிவு

■ நிதர்சன் லிணோத்

யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு, யாழ். போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் கண்புரை சத்திர சிகிச்சையை இலவசமாக மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் மூன்றாவது கண்பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அனலைதீவு பிரதேச வைத்தியசாலை, அம்பன் பிரதேச வைத்தியசாலை, மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள், மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு, தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கல்விசார் சமூகத்தை கட்டியெழுப்பும்

A+ செயற்றிட்டம்

கல்விசார் சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில், லங்கா விஷன் எக்சன் பவுண்டேசன் மற்றும் நண்பன் பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில், 'Project A+' எனும் செயற்றிட்டம், ஹட்டன், லெதண்டி தோட்டத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

'புரொஜெக்ட் A+' வேலைத்திட்டமானது, மலையகத்தில் பின்தங்கிய பகுதிகளில் அடிப்படை கல்வியைத் தொடர சிரமப்படும் மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, மேலதிக மாலை நேர வகுப்பாக இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

அந்த வகையில், இவ்வேலைத்திட்டத்தில் குறித்த பிரதேசங்களை சேர்ந்த தகுதியுள்ள ஆசிரியர்களின் மூலம் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தமிழ் உள்ளிட்ட பாடங்கள் இலவசமாக கற்பிக்கப்படும்.

இந்த ஆரம்ப நிகழ்வில், லங்கா விஷன் எக்சன் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைமை இயக்க மேலாளர் தியாகராஜா யுவராஜன், திட்ட ஒருங்கிணைப்பாளர்களான மூர்த்தி சதீஷ் கண்ணா, டியா செர்லின் குறித்த தோட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களும் பிரதேச மக்களும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

மலையக அரசியல் அரங்கத்தின்

சர்வதேச மகளிர் தின விழா

■ நிலமேகம் பிரசாந்த்

மலையக அரசியல் அரங்கத்தின் 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தின சிறப்பு உரையரங்கம், ஹட்டன் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள CSC மண்டபத்தில், நாளை சனிக்கிழமை (18) காலை 9.30க்கு நடைபெறவுள்ளது.

மலையகப் பெண்கள் அரங்கத்தின் தலைவர் ஆறுமுகம் சந்திரரேக்கா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், எழுத்தாளரும் அரசியல் செயற்பாட்டாளருமான கோகிலம் சுப்பையாவின் நினைவாக 'வெளிநாட்டில் பணிப்பெண் வேலை: பிரச்சினைகளும் சவால்களும்' (மலையகப் பெண்களை குறித்த சிறப்புப் பார்வை) எனும் தலைப்பில், பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் கலாநிதி பஸீஹா அஸ்மி பிரதான உரையாற்றவுள்ளார்.

கோகிலம் சுப்பையாவின் சமூக - இலக்கிய வாழ்க்கைக் குறிப்பையும் உரையாளர் பற்றிய அறிமுகத்தையும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா வழங்குவார். உரையைத் தொடர்ந்து இடம்பெறும் உரையாடல் அரங்கத்தையும் அவரே நெறிப்படுத்தவுள்ளார்.

அடையாளம் காணப்பட்ட பெண் செயற்பாட்டாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இதன்போது நடைபெறவுள்ளது.

நன்றியுரையை மலையகப் பெண்கள் அரங்கத்தின் செயலாளர் இதயஜோதி வழங்குவதுடன், நிகழ்ச்சிகளை நிஷாந்தினி சரவணகுமார் தொகுத்து வழங்கவுள்ளார்.

பயணிகளுக்கு

வடிகானால் அசௌரியம்

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி- வத்துகாமம் பிரதான வீதி, மடவளை நகரத்தின் பிரதான சந்தியிலுள்ள பஸ் தரிப்பிடத்துக்கு அருகாமையில் உள்ள வடிகானால், அங்கு வரும் பயணிகள் அசௌரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

பஸ் தரிப்பிடத்துக்கு வரும் பயணிகளுக்கு குறித்த வடிகான் இடையூறாக உள்ளதுடன், மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதற்கு, இவ்வடிகான் காரணமாக உள்ளதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வீதி அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டு உள்ளமையால் இந்நிலைமை தோன்றியுள்ளது. எனவே, வடிகானை முறையாக அமைத்து, வீதியை சீராக்குவதற்கு அல்லது இவ்விடத்தில் இருந்து பஸ் தரிப்பிடத்தை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பயணிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மக்கள் வங்கியின் மகளிர் தினம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில், மக்கள் வங்கியின் ஹட்டன் கிளையின் ஏற்பாட்டில், வங்கிக் கிளை அலுவலகத்தில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மக்கள் வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட 'வனிதா வசனா' கணக்குகளை ஊக்குவிக்கும் பொருட்டு இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, மக்கள் வங்கியின் ஹட்டன் கிளைக்கு வருகைதந்திருந்த 'வனிதா வசனா' கணக்கு வைத்திருக்கும் மகளிருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

மாடுகள் திருட்டு

உரிமையாளரால் முறைப்பாடு

■ சுமணசிறி குணதிலக்க

கரடுகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிடகும்புர பிகிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் (15) அதிகாலை மாடுகள் இரண்டு திருடப்பட்டுள்ளதாக அவற்றின் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கரடுகல பொலிஸார் தெரிவித்தனர்.

மாட்டின் உரிமையாளர், வீட்டுக்கு அருகிலுள்ள வயல்வெளியில் 14ஆம் திகதி மாலை இரண்டு மாடுகளையும் கட்டிவைத்துள்ளார்.

மறுநாள் காலை, வயல்வெளிக்குச் சென்றபோது, இரண்டு மாடுகளையும் திருடிச் சென்றுள்ளமை தெரியவந்தது.

மாடுகள் கட்டப்பட்ட இடத்துக்கு அருகே வாகனம் வந்திருந்தமைக்கான அடையாளங்கள் காணப்பட்டதுடன், திருடப்பட்டுள்ள இரண்டு மாடுகளின் பெறுமதி சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கரடுகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மெய்ப்பாதுகாவலரின்

துப்பாக்கியை காணவில்லை

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அக்கில சாலிய எல்லாவலயின் மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கி காணாமல் போய் உள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன், மேற்குறிப்பிட்ட விசேட அதிதிகளின் மெய்ப்பாதுகாவலர், குறித்த துப்பாக்கியை பையில் வைத்து இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அக்கில சாலிய எல்லாவலவின் பலாங்கொடை இல்லத்தில் உள்ள பாதுகாவலர் அறையில் வைத்து விட்டு விடுமுறையில் சென்றுள்ளார்.

விடுமுறை முடிந்து மீண்டும் கடமைக்காக வந்தபோது குறித்த பையில் துப்பாக்கி இருக்கவில்லை என்பதால், இந்த விடயம் குறித்து பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பெண்களுக்கான வதிவிட செயலமர்வு

■ எஸ். கே. குமார்

உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் உறுப்பினர்கள் மற்றும் செயலூக்கமுள்ள பெண் தலைவர்களுக்கு 'மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல்' தொடர்பான இரண்டு நாள் வதிவிட வசதிகளுடன் செயலமர்வு கடந்த 14-15 ஆம் திகதிகளில் நுவரெலியா குயின்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த வதிவிட செயலமர்வு பயிற்சியின் அமர்வுகள் மூலம், உள்ளூராட்சி நிறுவனத்தில் பெண்களின் தேவை மற்றும் முக்கியத்துவம், மக்கள் பிரதிநிதிகளாக ஆற்ற வேண்டிய பொறுப்புகள், கடமைகள், சமூகத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள், பாலின சமத்துவம், பெண்களின் உரிமைகள் - சலுகைகள், உள்ளூராட்சி அமைப்புகளின் பாதுகாப்பு, நிறுவனங்களின் அரசியலமைப்புகள், ஒழுங்கு முறைகளைக் கையாளுவது போன்றவை தொடர்பாக, விரிவான விளக்கங்களுடன் கலந்துரையாடப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 80 பெண் உறுப்பினர்கள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் பல்வேறு அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடவிருக்கும் பெண் வேட்பாளர்கள், சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபடும் பெண்கள் ஆகியோர் இந்த வதிவிட செயலமர்வில் கலந்துகொண்டனர்.

கட்டண விவகாரம்:

இராகலையிலும் போராட்டம்

■ அந்துவன்

வரிஅறவீடு, மின்சாரக் கட்டணம் அதிகரிப்புக்கு எதிராக நுவரெலியா, இராகலை நகரில் நேற்று முன்தினம் (15) ஒன்றுதிரண்ட ஆசிரியர், அதிபர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, கறுப்புக் கொடிகளை தாங்கி, கோஷங்களை எழுப்பியவாறு சுமார் ஒரு மணித்தியாலயம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், வரிச் சுமை என்பன மக்கள் மீது தான்தோன்றித் தனமாக திணிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், மறுபுறத்தில் மக்களின் அங்கிகாரமில்லாத ஜனாதிபதி ரணில் அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை குழிதோண்டி புதைத்து வருகிறது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தவிடாமல் தடுப்பதன் மூலமும் பாராளுமன்றத்தில் சிறுபிள்ளைத்தனமாக கருத்துகளை முன்வைத்ததன் மூலமும் தனது அரசியல் வங்குரோத்து தனத்தை ஜனாதிபதி வெளிபடுத்திக் கொண்டார் என போராட்டக்காரர்கள் சாடினர்.

பற்றை காட்டுக்கு தீ வைக்கும் விசமிகள்

■ இரா.யோகேசன்

வட்டவளை, தியகலைக்கு அருகில் அமைந்துள்ள நீர்வடிகாலமைப்பு சபைக்கு அருகில் காணப்படும் பற்றைக் காட்டுக்கு, நேற்று முன்தினம் (15) இனந்தெரியாத விசமிகள் தீ வைத்துள்ளனர்.

இதனால் சுமார் இரண்டு ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பகுதி தீக்கிரையாகியுள்ளது.

குறித்த பகுதியில் அடிக்கடி தீ வைக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனை தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, அப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சாரதிகளுக்கு எச்சரிக்கை

■ சுதத் எச். எம். ஹேவா

மலையத்தில் மாலை வேளைகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக, வீதிகளில் வாகன விபத்துகள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக ஹட்டன் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு எச்சரித்துள்ளது.

மழை காரணமாக ஹட்டன் வீதிகள் வழுக்கும் தன்மையில் உள்ளதால், அவ்வீதிகளில் வாகன விபத்துகள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக ஹட்டன் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலைமைகள் தொடர்பில் சகல சாரதிகளும் அவதானம் செலுத்தி, இவ்வீதிகளில் வாகனங்களை செலுத்தும் போது மிகவும் அவதானமாக செலுத்த வேண்டுமென அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கலுகல, பிட்டவல, கினிகத்தேனை, கடவளை, வட்டவளை, ஹட்டன் உள்ளிட்ட பகுதிகளிலும் ஹட்டன் - நுவரெலியா வீதியில் குடாகம, கொட்டகலை, சென்கிளேயர், தலவாக்கலை, ரதெல்ல, நானுஓயா உள்ளிட்ட இடங்களில் அடிக்கடி கடும் பனிமூட்டம் காணப்படுகின்றது.



எனவே, இவ்வீதிகளைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

வெற்றி, தோல்வியால் பாதிக்கப்பட்ட சாமானிய மக்கள்

பல தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, நாடளாவிய ரீதியில் 15ஆம் திகதி புதன்கிழமை நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்தால், பல துறைகளும் முடங்கியிருந்தன.

வங்கிச் சேவைகள், வைத்தியத்துறை, போக்குவரத்துத்துறை, பாடசாலைகள் தபால்துறை, துறைமுக சேவைகள், விமான சேவைகள் என அத்தியாவசியமான சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. அவசர தேவைகளுக்காக வைத்தியசாலைக்குச் சென்றிருந்த சாதாரண மக்கள், நீண்ட நேரம் காத்திருந்ததன் பின்னர், வெறும் கையுடன் அங்கிருந்து கிளம்பி, தனியார் வைத்தியசாலைக்குச் சென்று தங்களுடைய பிள்ளைகளுக்கு மருந்தை எடுத்துக்கொண்டு சென்றிருந்தனர். அவை தொடர்பிலான செய்திகளும் வெளியாகியுள்ளன. தனியார் மருந்தகங்கள், வைத்தியசாலைகள் பலவற்றை, அரச வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களே கொண்டுநடத்துகின்றனர் என்பது உண்மையாகும்.

வைத்தியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்திருந்தால், அரச வைத்தியர்களுக்குச் சொந்தமான சில தனியார் வைத்தியசாலைகள் மட்டும் எப்படி இயங்கமுடியும்? இங்குதான் மனிதாபிமானமும் தொழில்தர்மமும் கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது.

பொருட்களின் விலையேற்றத்தால் சகல மட்டங்களையும் சேர்ந்த மக்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால், அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கும் புதிய வரி அதிகரிப்பு, சாதாரண மக்களின் நாள் சம்பளத்துக்கோ அல்லது மாதச் சம்பளத்தின் மீதோ பெரும் தாக்கத்தை செலுத்தாது.

எனினும், பொருட்களின் விலைகளை குறை, மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களின் விலைகளை குறை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, சாதாரண மக்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதெல்லாம், வைத்தியசாலைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் யாவும் இயங்கின.

அந்தத்தரப்பை சேர்ந்தவர்கள், சாதாரண மக்களின் கோரிக்கைக்காக குரல்கொடுக்கவில்லை; கைக்கோர்க்கவும் இல்லை; களத்தில் இறங்கவும் இல்லை. எனினும், வரி அதிகரிப்பை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளால் சாமானிய மக்களே பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

இதற்கிடையே, புதன்கிழமை நடத்தப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தால் பெரும் பாதிப்பு ஏற்படவில்லையென அரசாங்க தரப்பினரும், தங்களுக்கு பாரிய வெற்றி கிடைத்துவிட்டது என தொழிற்சங்கங்களும் மார்தட்டிக்கொள்கின்றன. ஆனால், கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் சாமானிய மக்களாவர் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வேலைநிறுத்த அறிவிப்புக்கு பின்னர், வீட்டிலிருந்து வெளியே இறங்கி நிர்க்கதியாவதை விடவும், வீட்டுக்குள்ளே முடங்கிவிடவேண்டுமென தீர்மானித்தமையால், போக்குவரத்தில் ஈடுபட்ட பஸ்களில் மக்களின் எண்ணிக்கை மிகமிக குறைவாகவே இருந்தன. இரவு வேளைகளில் ஒருசில பஸ்களைத் தவிர, ஏனைய பஸ்கள் தங்களுடைய சேவைகளை முடக்கிக்கொண்டன.

போதுமான அளவுக்கு பயணிகள் இன்மையால், சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்களுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆகையால், உரிமைகளை வென்றெடுக்க ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்; அதைத் தடுக்கமுடியாது. ஆனால், வெற்றி, தோல்விக்கு அப்பால், சாமானிய மக்கள் மீதும் கரிசணை காட்டவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

கொள்ளையர்களின் பேச்சைக்கூட, மகாவேதம் என மக்கள் நம்புகின்றார்கள். பேசுவதால் அவர்கள் செயல்வீரர்கள் அல்லர்; அவர்கள் எத்தர்கள்.

ஏமாற்றுக்காரர்களில் பலர் பேச்சாளர்களாகி விட்டனர். இவர்கள், அரசியல், வியாபாரம் போன்ற துறைகளுக்குள் நுழைந்து, தமக்கான தேவைகளைப் பெற்று விடுகின்றனர்.

மனிதர்களைக் கோழைகள் ஆக்கினால் உலகமே பதறும். கல்வி அறிவு, அரசியல் ஞானம் உலகத்துக்குத் தேவையானது. இதை உணர்ந்து, தூய நெஞ்சத்துடன் செயற்பட்டால், அதுவே உலகின் வளர்ச்சிக்கு அடிநாதமாகிறது. நல்லோர்கள், வல்லோர்கள் புதுமனித இனத்தை உருவாக்குவதில் வேகம் காட்ட வேண்டும்.

ஒவ்வொரு வினாடியுமே செயற்கரிய சாதனைகளை ஆற்ற முடியும். நம்பிக்கையை ஒதுக்கி, எதுவுமே செய்யமுடியாது.

வெளியே தோன்றும் எல்லாமே உண்மையல்ல; தோற்றங்கள் மனிதரை ஏமாற்றுகின்றன. ஸ்திரமான வாழ்க்கை அமைய, நல்லவற்றைத் தேடியேயாக வேண்டும். வாழ்வின் வெற்றிக்கு அதுவே முதற்காரணம். வாழ்வு குறுகியது அல்ல; அகண்டது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 19:

இலத்தீன் அமெரிக்காவில் அதிவலதுசாரி அலையின் புதிய கட்டம்

தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகள், இலத்தீன் அமெரிக்கா பற்றிப் பேசுகின்ற போது முக்கியமானவையாகும்.

முதலாவது, இப்பிராந்தியத்தில் அதிகூடிய மக்கள் தொகையையும் மிகப்பெரிய நிலப்பரப்பையும் கொண்ட நாடான பிரேஸிலில், ஜனவரி மாதம் எட்டாம் திகதி, தேர்தலில் தோல்வியடைந்த அதிவலதுசாரி முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள், தலைநகர் பிரேஸிலியாவில் அரச கட்டடங்களைச் சூறையாடி, மிகப்பாரிய சேதத்தை விளைவித்தார்கள். இது, சில ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தேர்தலில் தோல்வி அடைந்ததை எதிர்த்து, அவரது ஆதரவாளர்கள் விளைவித்த சேதத்துக்கு ஒப்பானது.

பிரேஸிலில் அதிவலது வன்முறை அரங்கேறுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர், அதாவது, ஜனவரி ஆறாம் திகதி, பெரு நாட்டின் ஜனாதிபதி பெட்ரோ கஸ்டிலோ, ஓர் அதிவலதுசாரிகளின் சதித்திட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டார். இவை, இலத்தீன் அமெரிக்காவின் அதிவலதுசாரிகளின் நடவடிக்கைகள், இன்னொரு கட்டத்தை நோக்கி நகர்வதைக் காட்டி நிற்கின்றன.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், இலத்தீன் அமெரிக்காவில் ஓர் இடதுசாரித்துவ அலை வீசியது. அதன் குணவியல்புகளின் அடிப்படையில், அதை 'இளஞ்சிவப்பு அலை' (pink tide) என்று எல்லோரும் அழைத்தார்கள்.

பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில், இடதுசாரிச் சார்புள்ளவர்கள், தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தார்கள். இது, இப்பிராந்தியத்தில் ஜனநாயகம், பொருளாதாரம் ஆகியவற்றில் மீது பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது.

கிட்டத்திட்ட அரை நூற்றாண்டு காலத்தின் பின்னர், இன்று நிலைமை முற்றிலும் வேறாக மாறிவிட்டது. தேர்தல்களில் இடதுசாரிகள் சிறப்பாக செயற்படாதபடி பார்த்துக் கொள்ள, எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

இந்த எதிர்ப்புரட்சி செயற்பாடுகளின் பிரதான அம்சமாக, தீவிர அதிவலதுசாரித்துவத்தின் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டது. இலத்தீன் அமெரிக்காவில், தீவிர அதிவலதுசாரித்துவத்துக்கு இரத்தம் தோய்ந்த ஒரு வரலாறு உண்டு. ஆனால், இப்போதைய மீள்எழுச்சியானது, இடதுசாரி முற்போக்கு சக்திகளை ஒழித்துக் கட்டுவதை நோக்காகக் கொண்டது. இலத்தீன் அமெரிக்காவில், இந்தப் புதுப்பிக்கப்பட்ட அதிவலதுசாரித்துவத்தின் எழுச்சியானது, உலக அளவில் அதிதீவிர வலதுசாரித்துவத்தின் ஒருங்கிணைப்பால் உந்தப்படுகிறது.

இடதுசாரிச் சார்பு எழுச்சிக்குக் காரணம், அவர்கள் சாதாரண மக்களை, பழங்குடிகளைப் பிரதிநிதித்துவம் செய்தார்கள்; அவர்தம் நலன்களை முன்னிறுத்தினார்கள். இதனால், பல்தேசிய கம்பெனிகளை, செல்வந்த உயரடுக்கை எதிர்த்தார்கள். இன்று, அதிவலதுசாரி செல்வந்தர்களினதும் பல்தேசிய கம்பெனிகளினதும் அடியாளாக உள்ளது.

இன்றைய போராட்டம் என்பது, உண்மையில் கிராமப்புற விவசாயிகள், பாரம்பரியமாக நிலத்தின் பராமரிப்பாளர்களாக இருந்த பழங்குடியினருக்கும் அவர்களை இடம்பெயரச் செய்து, அவர்களின் நிலத்தை எடுக்க விரும்புகின்றவர்களுக்கு இடையிலானது. இது உற்பத்தி வழிமுறைகளைப் பற்றியது.

இந்தப் பெரிய நிலங்களை கையகப்படுத்துவதற்கான போராட்டத்தின் பகுதியே, அதிவலதின் எழுச்சியாகும். அதனால்தான், நிச்சயமாக, இங்குள்ள மக்கள் இயக்கங்கள் நிலத்தை ஜனநாயகமயமாக்குவதற்குப் போராடின; உற்பத்தி செய்ய நிலத்தை அணுகுவதற்குப் போராடின. இவற்றைச் சாத்தியமாக்குவதன் ஊடு, மக்கள் எங்காவது வாழ, எங்காவது வளர மற்றும் உற்பத்தி செய்ய உரிமை உண்டு. அவர்கள் இடம்பெயர்ந்து வீடற்றவர்களாக இருக்காது, தமக்கான உணவு உற்பத்தியைச் செய்ய முடியும்; ஏற்றுமதி செய்ய முடியும். மற்றும், பொருளாதார ரீதியாக முன்னேற, மற்ற விடயங்களைச் செய்ய முடியும்.

ஆனால் இதை தங்களது நிலங்களாகக் கையகப்படுத்தி, தங்கள் சுரண்டலுக்குப் பயன்படுத்த செல்வந்தர்களும் பல்தேசிய கம்பெனிகளும் அதிவலதுசாரிகளும் கைகோர்த்துள்ளன.

இலத்தீன் அமெரிக்காவில், நாம் பெரும்பாலும் பார்ப்பது, கறுப்பின மக்களுக்கும் பணக்கார வெள்ளையர்களுக்கும் இனத்தின் அடிப்படையில் நடக்கும் வெறும் கலாசாரப் போரை மட்டுமல்ல! இது, நிலம் மற்றும் வளங்களுக்கான போராட்டம்.

இயற்கை வளங்களின் மீது இறையாண்மை, நிலத்தின் மீது இறையாண்மை, அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்து, அவற்றை உற்பத்தி செய்ய விரும்பும் மக்களுக்கு எதிராக, இயற்கை வளங்களைச் சுரண்டுவதற்காக, அந்தப் பகுதிகளுக்கு அணுகல் தேடும் நாடு கடந்த நலன்களுக்கு எதிரான போராட்டம் ஆகும்.

அவர்களின் சொந்த நலனுக்காக, தங்களுக்கு வாய்ப்பான ஆட்சியாளர்களை உருவாக்கும் எதிரான ஆட்சியாளர்களை அகற்றும் நடவடிக்கைகளுக்கு, எதிரான போராட்டம். இந்தப் பின்புலத்திலேயே அதிவலதுசாரித்துவத்தின் புதிய அலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இலத்தீன் அமெரிக்க தீவிர அதிவலதுசாரித்துவத்துக்கு ஒரு வரலாறுண்டு. சர்வாதிகாரத்தன்மை, கவர்ந்திழுக்கும் ஆற்றலுடைய இராணுவத் தலைவர்கள், இதில் முக்கிய பங்கு வகித்துள்ளனர். இலத்தீன் அமெரிக்காவில் தீவிர வலதுசாரிகளின் மூன்று அலைகளை நாம் அடையாளம் காண முடியும்.

இதன் முதலாவது, 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தோடு தொடங்கியது. 1930இல் 'வோல் ஸ்ட்ரீட்' நெருக்கடியுடன், ஆர்ஜென்டினா மற்றும் பிரேஸில் போன்ற நாடுகளில் 'பாரம்பரிய ஜனரஞ்சகவாதம்' வெளிப்பட்டது. இது கம்யூனிசத்துக்கு எதிரான தற்காப்பாக உயரடுக்கினரால் புரிந்து கொள்ளப்பட்ட அதேவேளை, தொழிலாளர் வர்க்கத்தால் சமூக நிலைமைகளின் முன்னேற்றத்துக்கான வழி என்று ஏற்கப்பட்டது.

இராணுவத்தின் ஆதரவுடன், அர்ஜென்டினாவில் ஜுவான் பெரோன், பிரேஸிலில் கெட்டுலியோ வர்காஸ் ஆகியோர், தீவிர வலதுசாரி, பாசிச அறிவுஜீவிகள் மற்றும் ஆதரவாளர்களுடன் கூட்டணிகளை நிறுவி ஆட்சிக்கு வந்தனர். இது, இலத்தீன் அமெரிக்க அரசாங்கங்கள் மீது, ஐரோப்பிய பாசிச செல்வாக்கைக் காட்டிய ஒரு முக்கியமான தருணம். பெரோன் (முன்னாள் ஜெனரல்) மற்றும் வர்காஸ் (இராணுவத்தின் நெருங்கிய கூட்டாளி) ஆகிய இருவரும் ஐரோப்பிய பாசிச ஆட்சிகளின் அபிமானிகளாக இருந்தனர். ஆனால், கூட்டணிகளை நிறுவி, நகர்ப்புற தொழிலாள வர்க்கம் மற்றும் ஏழை கிராமப்புற சமூகங்களுக்கு சில உரிமைகளை வழங்கினர்.

இந்தச் சர்வாதிகார ஜனநாயகம், பாரம்பரிய மற்றும் பிரபுத்துவ உயரடுக்குகளை மாற்றியது. அவர்களது செயற்பாடுகளின் மீது, தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் வலிமையை இழந்தனர். பெரோன், வர்காஸ் ஆகிய இருவரும், சர்வாதிகார ஆட்சிகளை நிறுவினர். கம்யூனிசத்துக்கு எதிராக சிறந்த போராளிகளாக தங்களை முன்வைத்தனர். இந்நாடுகளில் கம்யூனிஸ்ட்கள் மிகுந்த துன்பங்களுக்கு உள்ளாகினர்.

தீவிர வலதுசாரிகளின் இரண்டாவது அலை, 1959ஆம் ஆண்டு கியூபப் புரட்சிக்குப் பின்னர், இலத்தீன் அமெரிக்காவில் கெடுபிடிப்போரின் தாக்கத்தோடு தொடங்கியது.

மேல்தட்டு மக்களிடையே கம்யூனிசம் பற்றிய அச்சம், மற்றும் இடதுசாரி தீவிரமயமாக்கலுக்கு எதிரான அமெரிக்காவின் ஆதரவு ஆகியவை, இந்தச் சூழலை வரையறுத்தன. 60கள், 70களில் தீவிர வலதுசாரி சர்வாதிகாரங்களின் ஒரு சக்திவாய்ந்த சுழற்சி தோன்றியது. இது, இடதுசாரி இயக்கங்கள் மற்றும் தொழிலாள வர்க்கத் தலைவர்களைத் தாக்கியது,

குறிப்பாக, தெற்குமுனை நாடுகளில் (அர்ஜென்டினா, பிரேஸில், சிலி, உருகுவே) மற்றும் மத்திய அமெரிக்காவில் கொடூரமாக இருந்தது. இந்தக் காலகட்டத்தின் சிறந்த பிரதிபலிப்பு, சிலியில் (1973-1990) இருந்த அகஸ்டோ பினோஷேயின் சர்வாதிகாரமாகும்.

இது இப்பகுதியில் புதிய தாராளமயம் மற்றும் சர்வாதிகாரத்தின் முதல் கூட்டிணைவுக்கு உதாரணமானது. இராணுவ ஜெனரல் பினோஷே, இலத்தீன் அமெரிக்க அதி வலதின் மிக முக்கியமான தலைவராக இருந்தார், மேலும், அவர் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேறிய பிறகும், அவர் ஒழுங்கமைத்த அதிவலது ஒழுங்கு, சிலி சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தியது.

இலத்தீன் அமெரிக்க தீவிர வலதுசாரிகளின் மூன்றாவது அலையில், நாம் தற்போது இருக்கிறோம். முற்போக்கான நவதாராளவாத எதிர்ப்பு, இடதுசாரி ஜனரஞ்சக அரசாங்கங்களின் உருவாக்கத்துக்கு எதிரானதாக, இந்த அலை இப்போது இருக்கிறது. ஒட்டுமொத்தமாக, இலத்தீன் அமெரிக்காவில் தீவிர வலதுசாரிகளின் வரலாறு, இராணுவ சக்தி, நவதாராளவாதத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நவதாராளவாதமே, இன்று மக்களின் பரந்துபட்ட எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது.

'இளஞ்சிவப்பு அலை' ஏற்படுத்திய சமூக விழிப்புணர்வும் போராடுவதற்கான உந்துதலும், நவதாராளவாதத்துக்கு பெரிய சவாலாகவுள்ளது. இன்று இலத்தீன் அமெரிக்கா எங்கும் அதிவலதுசாரிகளுக்கு ஆதரவு பெற்ற வளச்சுரண்டலுக்கு எதிராக, மக்கள் போராடுகிறார்கள். இது, இடதுசாரிச் சார்புள்ள ஆட்சிகள் மீள்வதற்கு வழி செய்துள்ளது. இடதுசாரிகளின் இந்த மீள்எழுச்சிக்கு விடையிறுக்கும் வகையில், பிராந்தியத்தில் அதிவலதுசாரி இயக்கங்கள், கட்சிகள் மற்றும் தீவிர வலதுசாரிகளின் மறுஉருவாக்கமும் அவை பலப்படுத்தப்படுவதையும் நாம் காண்கிறோம்.

இதன் விளைவுகளின் ஒரு பகுதியே, இவ்வாண்டு தொடக்கத்தில் அரங்கேறிய நிகழ்வுகள். பிரேஸிலில் 2018இல் அதிவலதுசாரி நபர் ஜனாதிபதியானமை முக்கியமானது. இது, இலத்தீன் அமெரிக்க அதிவலதுக்கு மிகப்பெரிய ஊக்க மருந்தானது. இதில் இலத்தீன் அமெரிக்காவின் அதிவலசாரித்துவத்தின் வரலாற்றுக்கும் பங்குண்டு.

கடிதங்கள்

வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் காணப்படுகின்ற வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக, நோயாளர்கள் வவுனியா உட்பட பிற மாவட்டங்களுக்கு மேலதிக சிகிச்சைக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

வைத்தியசாலைக்கு நியமிக்கப்படுகின்ற வைத்திய நிபுணர்கள் குறுகிய காலங்களுக்குள் இடமாற்றம், மேலதிக படிப்பு என சென்று விடுவதன் காரணமாக, பொது வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக, நோயாளர்கள் தொடர்ச்சியாக மேலதிக சிகிச்சைக்கு பிற இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இது தொடர்பாக, மாவட்ட மட்ட கூட்டங்களில் பல தடவைகள் கலந்துரையாடப்பட்ட போதிலும் தீர்வுகள் கிடைக்கவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளை பெருமளவில் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு பொது வைத்தியசாலை உட்பட சகல வைத்தியசாலைகளிலும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்து நிலவுகின்றது. இதன் காரணமாக வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்கு செல்லும் மக்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொதுவைத்தியசாலையில் காணப்படுகின்ற வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்படும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

நடராசா கிருஸ்ணகுமார்

Ex-Pack Corrugated Cartons PLC உளவியல் நலனுக்கு முன்னுரிமை

சர்வதேச மகளிர் தினத்தை குறிக்கும் வகையில், Ex-Pack Corrugated Cartons PLC இனால், தமது களனி தொழிற்சாலை வளாகத்தில் விசேட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உளவியல் நலனின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், தனது 300 வலிமையான ஊழியர்களுக்கு தமது பரந்த DEI கொள்கைகளின் பிரகாரம் இயங்கக்கூடிய சூழல் எவ்வாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பற்றி விளக்கமளிக்கும் வகையிலும் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

உளவியல் நோய் நிலைகளுக்கு ஆண்களை விட பெண்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாக பல்வேறு சர்வதேச ஆய்வுகளினூடாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த அமர்வின் போது, பெண் ஊழியர்களின் சாதனைகள் மற்றும் வாழ்க்கைக் கதைகள் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன், பெண்களின் பதவி நிலைகள், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் தொடர்பில் நாம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை மாற்ற வேண்டியதன் அவசியம் அடங்கலாக பல்வேறு இதர தாக்கம் செலுத்தும் காரணிகள், விழிப்புணர்வூட்டும் குறிப்புகள், மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் போன்ற பல அம்சங்களும் பகிரப்பட்டிருந்தன. நலனில் தாக்கம் செலுத்தும் உணர்வுபூர்வமான மற்றும் சமூக அம்சங்கள் பற்றியும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

#EmbraceEquity என்பதாக இந்த ஆண்டின் தொனிப்பொருள் அமைந்திருந்ததுடன், பாரம்பரியமாக ஆண்களினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வரும் தொழிற்துறையில், பாலின சமத்துவத்தைப் பின்பற்றி இயங்குவதானது Ex-Pack ஐப் பொறுத்தமட்டில் புதிய விடயமல்ல. இலங்கையின் முன்னணி அலைவுநெளிவுள்ள பொதிகள் உற்பத்தியாளராகத் திகழ்வதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு பொதியிடல் தீர்வுகளை வழங்கும் நிறுவனமாகவும், அபர்தீன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின் துணை நிறுவனமாகவும் Ex-Pack திகழ்கின்றது. இந்நிறுவனம் பெருமளவு பெண்கள் பங்கேற்பை அதிகம் ஊக்குவிக்கின்றது.

Ex-Pack Corrugated Cartons PLC முகாமைத்துவ பணிப்பாளர் சுல்பிகர் கௌஸ் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஆண்டின் தொனிப்பொருளாக #EmbraceEquity என்பது பின்பற்றப்பட்டிருந்த நிலையில், எமது துறையில் தூதுவர்களாகவும், முன்மாதிரியானவர்களாகவும் திகழ்வதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். வெறும் சம வாய்ப்புகள் என்பதற்கு அப்பால் சென்று, அனைவருடனும் கைகோர்த்து, திறமையான பெண்களுக்கு அவசியமான சகல வளங்களும் கிடைக்கச் செய்வதை உறுதி செய்வதுடன், தொழில்நிலையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் வெற்றிகரமாக இயங்குவதற்கு அவசியமான ஆதரவை வழங்குவதையும் உறுதி செய்கின்றோம்." என்றார்.

நீண்ட காலமாக சமத்துவமான தொழில் வாய்ப்புகளை வழங்கும் நிறுவனமாக Ex-Pack கருதப்படுவதுடன், ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் சமமான முறையில் மதிப்பளிக்கப்பட்டு, வெகுமதியளிக்கப்பட்டு மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சகல ஊழியர்களுக்கும் திறந்த-கதவுக் கொள்கையை (open-door policy) நிறுவனம் கொண்டுள்ளது. பெண்களுக்கான வலுவூட்டல் என்பது உயர் முகாமைத்துவத்திலிருந்து நேரடியாக வருவதுடன், நிறுவனத்துக்கும் ஒட்டு மொத்த பொருளாதாரத்துக்கும் பெண்களும், அவர்களின் வலிமைகளும் முக்கியமானவையாக அமைந்திருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளது.

பாலினசார் பக்கசார்பு மற்றும் பாகுபாடு போன்றவற்றுக்கெதிராக பூஜ்ஜிய-சகிப்பு (zero-tolerance) நிலைக்கு தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் களங்கம் தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றது. பெண்களின் வாழ்க்கையில் இவ்வாறான நடத்தைகளினால் ஏற்படக்கூடிய நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய பாதிப்புகளை புரிந்து கொண்டு இவ்வாறான உயர்ந்த பண்புகளைக் கொண்ட செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. நிறுவனம் பரந்தளவு மற்றும் உள்ளடக்கமான பணியிடச் சூழலைக் கொண்டுள்ளதாக நிறுவனம் அதிகளவில் பாராட்டுதல்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், மதம், இனம், வயது, பாலினம், நம்பிக்கைகள் போன்ற எவ்விதமான பாகுபாடுமின்றி ஒவ்வொரு தனிநபர்களினதும் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றது.

யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப்பின் வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பு

யூனியன் அஷ்யூரன்ஸ், 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப் வெற்றியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வை அண்மையில் முன்னெடுத்திருந்தது. கொழும்பு 3 இல் அமைந்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம், ஊழியர்கள் மற்றும் முகவர் விநியோக நாளிகையின் வெற்றியாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப் என்பது பெருமைக்குரிய, ஆலோசகர்களை மையப்படுத்திய வெகுமதித் திட்டமாக அமைந்திருப்பதுடன், தொடர்ச்சியாக சிறந்த விற்பனை பெறுபேறுகள், ஒப்பற்ற வாடிக்கையாளர் சேவை மற்றும் நிபுணத்துவ விருத்திக்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தியிருந்த சிறந்த ஆயுள் காப்புறுதி ஆலோசகர்களை கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு காலாண்டிலும் கௌரவிக்கப்படுவதுடன், வெற்றியாளர்களுக்கு பிரத்தியேகமான அனுகூலங்கள் மற்றும் சொகுசான மோட்டார் கார்கள், வியாபார அபிவிருத்தி வெகுமதிகள், பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு வாழ்க்கைமுறை வெகுமதிகள் வழங்கப்படுகின்றன.

40க்கும் அதிகமான வெற்றியாளர்களின் சிறந்த பெறுபேறுகளை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப் என்பது, சாதாரண வெகுமதித் திட்டத்துக்கு அப்பாலானது. எமது ஆலோசகர்களுடன் அவர்களின் சிறந்த செயற்பாட்டுக்காக, ஆழமான, அர்த்தமுள்ள உறவுகளைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரு வழிமுறையாக அமைந்துள்ளது. துரிதமாக மாற்றமடையும் வியாபாரக் சூழலினாலும், 2022 ஆம் ஆண்டில் சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டிருந்த பல்வேறு சம்பவங்களினாலும் எழுந்திருந்த பல சவால்களுக்கு மத்தியில் எமது ஆலோசகர்கள் நான்காம் காலாண்டில் சிறப்பாக செயலாற்றி, சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, தரவுகளை மையமாகக் கொண்டு செயலாற்றியிருந்ததுடன், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை பெற்றுக் கொடுத்திருந்தனர். சகல வெற்றியாளர்களுக்கும், அவர்களின் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவிப்பதுடன், எதிர்காலத்தில் மேலும் சிறந்த சாதனைகளைப் புரிவதற்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்." என்றார்.

பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப் வெகுமதித் திட்டத்தினூடாக, எமது வெற்றிகரமான செயற்பாட்டுக்கு பின்புலமாக அமைந்திருக்கும் ஊழியர்கள், தொழிற்துறையில் எமது நிறுவனம் சிறந்த சாதனைகளை எய்தக் காரணமாக அமைந்திருப்பவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களின் சாதனைகளை கௌரவிப்பதுடன், எமது நிறுவனத்தின் நோக்கமான இலங்கையர்களுக்கு தமது கனவுகளை நனவாக்கிக் கொள்ள அவசியமான நிதிப் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்து வலுச்சேர்ப்பது என்பதற்காக தம்மை அர்ப்பணித்துள்ளமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அமைந்துள்ளது என்றார்.

சென்னை

எடப்பாடி பழனிசாமியின் உருவப்படம் எரிக்கப்பட்டதால்

தமிழகத்தில் பரபரப்பு

சென்னை, பாரதிய ஜனதா கட்சியின் தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவராக இருந்த நிர்மல்குமார் என்பவர் அண்மையில் அக்கட்சியில் இருந்து விலகி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்.

இவர் இணைந்த அடுத்த கணமே மேலும் சில பா.ஜ.க நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி அ.தி.மு.கவில் சேர்ந்தனர்.

இச்சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், இது தொடர்பாக அ.தி.மு.க பா.ஜ.க இடையே கருத்து மோதல் நிலவி வந்தது. இதன்போது ஆத்திரமடைந்த பா.ஜ.க நிர்வாகிகள் சிலர் அ.தி.மு.க இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் உருவப்படத்தை எரித்தனர்.

இந்நிலையில் எடப்பாடி பழனிசாமி உருவப்படத்தை எரித்தவர் மீது அக்கட்சி தலைமை, நடவடிக்கை எடுக்க வேண்டுமென அ.தி.மு.க உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்தனர்.

இதனையடுத்து இச்சம்பவத்துடன் தொடர்புடைய தினேஷ் ரோடியை 6 மாத காலம் கட்சியில் இருந்து இடை நீக்கம் செய்வதாக பா.ஜ.க நேற்று முன்தினம் காலை அறிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் மீண்டும் தினேஷ் ரோடி பா.ஜ.கவில் இணைக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் முதல் ஆளில்லா பிரியாணி

சென்னை

இந்தியாவின் முதல் ஆளில்லா பிரியாணி விற்பனையகத்தை (Manless Takeaay). பி வி கே '(BVK) பிரியாணி' என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக மக்களின் பேராதரவுடன் இயங்கி வரும் குறித்த நிறுவனம் தற்போது சென்னை கொளத்தூரில், முதல் முறையாக ஆளில்லா பிரியாணி விற்பனையகத்தை நிறுவியுள்ளனர்.

அதுமட்டுமல்லாது சென்னையில் மேலும் 12 இடங்களிலும் இதை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளனர்.

இம்முறை மூலம் வாடிக்கையாளர்கள் குறித்த நிறுவனத்துக்கு சென்று, அங்குள்ள டிஜிட்டல் திரையில் உங்களுக்கு வேண்டிய உணவை தேர்ந்தெடுத்து ஓர்டர் செய்து , பணத்தை வங்கி கிரெடிட், டெபிட் கார்டுகள் மூலமாகச் செலுத்த முடியும்.

இதனையடுத்து உணவை ஓர்டர் செய்த மறுகணமே குறித்த உணவானது வாடிக்கையாளர்களின் கைகளில் பொதிசெய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

கோயம்பேடு

பட்டம் பறக்கவிட்ட மாணவன் கைது

பட்டம் பறக்கவிட்ட பாடசாலை மாணவன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் கோயம்பேட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் `மாஞ்சா நூல்` பட்டம் பறக்கவிடவும், மாஞ்சா நூல் விற்பனைசெய்யவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம்(15) இரவு அயப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த இவாஞ்சலின் என்ற 23 வயதான பெண் பொறியியலார் ஒருவர் தனது நண்பர் அஜய் என்பவருடன் மோட்டார் சைக்கிளில் கோயம்பேடு பகுதிக்கு சென்றுள்ளார்.

இதன்போது அந்த வழியாக அறுந்து வந்த மாஞ்சா நூல் பட்டமானது குறித்த இருவர் கழுத்திலும் சிக்கி அறுத்தது.

இதில் நிலை தடுமாறிய இருவரும் மோட்டார் சைக்கிளோடு கிழே விழுந்த நிலையில், லேசான காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இதனையடுத்து இருவரும் கோயம்பேடு பொலிஸ் நிலையத்தில் இது குறித்து புகார் அளித்தனர்.

இப்புகாரின் பேரில், பொலிஸார் மாஞ்சா நூல் மூலம் பட்டம் பறக்கவிட்டு காயம் ஏற்படுத்திய கோயம்பேடு பகுதியைச் சேர்ந்த 12ஆம் தர மாணவனைக் கைது செய்து, விசாரித்து வருகின்றனர்.

கன்னியாகுமரி

பெண்களுடன் ஆபாச வீடியோ; மதபோதகர் தலைமறைவு

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேவாலயமொன்றில் 27 வயதான மதபோதகர் (பாதிரியார்) ஒருவர் பணியாற்றி வந்துள்ளார்.

இவர் குறித்த தேவாலயத்திற்கு வரும் பெண்களுடன் அன்பாகப் பழகி அவர்களைத் தனது காதல் வலையில் விழ வைத்து, அவர்களது அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களைப் பெற்று, அதன் பின்னர் குறித்த வீடியோக்களை இணையத்தில் வெளியிட்டு விடுவதாக மிரட்டி அவர்களை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு 'பாதிரியாரின் லீலைகள்' என்ற பெயரில் அம்மதபோதகர் இளம்பெண்களுடன் செய்த ஆபாச பேச்சு, வீடியோக்கள் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண்கள் சிலர் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததைத் தொடர்ந்து, குறித்த மதபோதகர் தலைமறைவாகியுள்ளார் எனவும், அவரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடிவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தர பிரதேசம்

பெண் மீது சிறுநீர் கழித்த டிக்கெட் பரிசோதகர்

உத்தர பிரதேசத்தில் ஓடும் ரயிலில் பெண் பயணியொருவர் மீது, பயணச்சீட்டுப் பரிசோதகர் சிறுநீர் கழித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் இருந்து கியூல் நோக்கிப் பயணித்த புகையிரத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று மதுபோதையில் இருந்த பயணச்சீட்டுப் பரிசோதகரான முன்னா குமார் என்பவர், குறித்த ரயிலில் பயணித்த பெண் பயணி மீது சிறுநீர் கழித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அப்பெண் கூச்சலிட்டதையடுத்து, சகபயணிகள் டிக்கெட் பரிசோதகரை சிறைப்பிடி சார்பஹ் ரயில் நிலைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்

இதனையடுத்து முன்னாவைக் கைது செய்து, பொலிஸார் சிறையில் அடைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா

"முதலிரவு நடக்கவில்லை"

மனைவியையும் , மாமியாரையும் கொலை செய்த நபர்

ஆந்திராவின் கர்னூல் நகரை சேர்ந்தவர் சரவணன். தெலுங்கானாவின் வனபாத்தியைச் சேர்ந்த ருக்மணி (வயது 20) என்பவருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது.

ருக்மணியின் வீட்டில் புதுமணத் தம்பதிக்கு முதலிரவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோது, சரவணனுக்கு தாம்பத்தியத்தில் ஈடுபாடு இல்லாததால் அன்று முதலிரவு நடக்கவில்லை.

அடுத்தடுத்த நாட்களிலும் இதே நிலையே நீடித்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த ருக்மணி, இதுகுறித்து தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ள நிலையில் இத்தகவலானது அந்த ஊர் முழுவதும் பரவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனஉளைச்சலுக்குள்ளான அவர் இது குறித்து தனது தந்தையிடம் தெரியப்படுத்தியதையடுத்து, ஆத்திரமடைந்த அவரது தந்தை தனது மருமகளின் குடும்பத்தினரைத் தீர்த்துக்கட்ட முடிவுசெய்துள்ளார்.

இத்தாக்குதலில் ருக்மணியும் அவரது தாயாரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், படுகாயமடைந்த ருக்மணியின் தந்தை அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

இன்று ஆரம்பிக்கிறது ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர்:

இந்தியாவா? அவுஸ்திரேலியாவா?

இந்திய, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, மும்பையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

உலகக் கிண்ணத் தொடரானது இவ்வாண்டு இந்தியாவிலேயே இடம்பெறவுள்ள நிலையில், இரண்டு அணிகளும் தம்மைப் பரிசோதித்துக் கொள்ளும் களமாக இத்தொடர் காணப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் முதலாவது போட்டியில் அணித்தலைவர் றோஹித் ஷர்மா இல்லாத நிலையில், இஷன் கிஷனுக்கு ஆரம்பத் துடுப்பாட்டவீரராகக் களமிறங்க வாய்ப்புக் கிடைக்கும். எனினும், கிஷனுக்கும், ஷ்ரேயாஸ் ஐயர் இல்லாத நிலையில் சூரியகுமார் யாதவ்வுக்கும் தம்மை நிரூப்பிப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக இத்தொடர் காணப்படுகிறது. மறுபக்கமாக அவுஸ்திரேலியாவைப் பொறுத்த வரையில் அணித்தலைவர் பற் கமின்ஸ், ஜொஷ் ஹேசில்வூட் இல்லாதது இழப்பென்ற நிலையில், டேவிட் வோர்னரிடமிருந்து ஓட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

சம்பியன்ஸ் லீக்:

காலிறுதியில் நடப்பு சம்பியன்கள் றியல் மட்ரிட்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்று இறுதி 16 அணிகளுக்கிடையிலான போட்டியில் 5-2 என்ற கோல் கணக்கில் வென்ற ஸ்பானிய லா லிகா கழகமான றியக் மட்ரிட், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று 6-2 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை கரிம் பென்ஸீமா பெற்றிருந்தார்.

கராத்தேயில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பு

எம்.எம். அஹமட் அனாம்

தேசிய மட்ட கராத்தே திறந்த போட்டியில் சாதனை படைத்த ஓட்டமாவடி தேசிய பாடசாலை மாணவர்களை கௌரவித்தலும் கராத்தே சீருடை அறிமுகமும், பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

ஏ.எஸ்.டி. டோஜோ கராத்தே டு சோடோகான் அமைப்பினால் நாடளாவிய ரீதியில் உள்ள கராத்தே பயிற்சி மாணவர்களுக்கிடையில் குமிதே போட்டி (இருவர்களுக்கிடையிலானது) நடாத்திய போட்டியில் காத்தா போட்டி (தனிநபர்களுக்கானது) என்பன இடம் பெற்றது. இதில் ஓட்டமாவடி தேசிய பாடசாலையில் இருந்து தரம் ஆறு தொடக்கம் தரம் 12 வரையிலான மாணவர்கள் 16 பேர் கலந்து கொண்டு 27 பதக்கம்களை வென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதில் ஒன்பது தங்கப் பதக்கங்கள், 10 வெள்ளிப் பதக்கங்கள், எட்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ள மாணவர்களை பாடசாலை நிருவாகம் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவித்தது.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில்

நான்காமிடத்துக்கு முன்னேறிய அக்ஸர் பட்டேல்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்துக்கு இந்தியாவின் அக்ஸர் பட்டேல் முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் 79 ஓட்டங்களைப் பெற்றதோடு, 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தை பட்டேல் அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. அக்ஸர் பட்டேல், 5. பென் ஸ்டோக்ஸ்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட டெஸ்டில் 180 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் உஸ்மான் கவாஜா, துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் ஒன்பதாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

தவிர, இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில் 183 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்தின் டரைல் மிற்செல், 12ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. ஜோ றூட், 4. பாபர் அஸாம், 5. ட்ரெவிஸ் ஹெட், 6. கேன் வில்லியம்ஸன், 7. உஸ்மான் கவாஜா, 8. டரைல் மிற்செல், 9. றிஷப் பண்ட், 10. றோஹித் ஷர்மா.

இதேவேளை, இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் நேதன் லையன், ஒன்பதாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின் 2. ஜேம்ஸ் அன்டர்சன், 3. பற் கமின்ஸ், 4. ககிஸோ றபாடா, 5. ஷகீன் ஷா அஃப்ரிடி, 6. ஒலி றொபின்ஸன், 7. ஜஸ்பிரிட் பும்ரா, 8. நேதன் லையன், 9. இரவீந்திர ஜடேஜா, 10. கைல் ஜேமிஸன்.

துருக்கி

துருக்கியில் துன்பியல்; 14 பேர் உயிரிழப்பு

துருக்கியில் கொட்டித் தீர்த்த கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி, 14 பேர் உயிரிழந்தனர்.

துருக்கியின் சான்லியுர்ஃபா மற்றும் அதியமான் மாகாணங்களில்கடந்த சில நாட்களாக வெள்ளம் கரைபுரண்டு ஓடிவருகின்றது.

இதன்காரணமாக, வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஏராளமான கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, ஒன்றோடொன்று மோதி உருக்குலைந்தன.

இந்நிலநடுக்கத்தால் வீடுகளை இழந்த மக்கள் கண்டெய்னர்களிலும், கூடாரங்களிலும் வசித்துவரும் நிலையில், வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுவருகின்றனர்.

பிரித்தானியா



வளர்ப்பு நாயால் சர்ச்சையில் சிக்கிய 'ரிஷி'

`பொதுஇடங்களில் சங்கிலியுடன் வளர்ப்பு நாயை அழைத்துச் செல்ல வேண்டும்` என்ற சட்டம் பிரித்தானியாவில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இந்லையில் அந்நாட்டு பிரதமராக உள்ள இந்திய வம்சாவழியான ரிஷி சுனக் குடும்பத்தினருடன் லண்டன், ஹைட் பூங்காவில் நடைப்பயிற்சி சென்ற கொண்டிருந்தபோது அவரது வளர்ப்பு நாயான நோவா சங்கிலி இல்லாமல் சுற்றிய வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கெனவே கொரோனா காலத்தில் கட்டுப்பாட்டை மீறியதாகவும், காரில் ஆசனப் பட்டி அணியாமல் இருந்தமைக்காகவும் ரிஷி சுனக் சர்ச்சையில் சிக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

"நான் வேற்று கிரகத்தைச் சேர்ந்தவன்"- ஆடையற்ற நபரால் பரபரப்பு

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நபர் ஒருவர் நிர்வாணமாக நடமாடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெஸ்ட் பாம் பீச் பகுதியைச் சேர்ந்த 44 வயது நபரான ஜேசன் ஸ்மித் என்ற நபரே கடந்த 8 ஆம் திகதி வொர்த் அவென்யூ என்ற பகுதியில், இவ்வாறு ஆடைகளின்றி நடமாடியுள்ளார்.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய நிலையில், அங்கு விரைந்த பொலிஸார் அவரைப் பிடித்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இதன் போது அவர் "நான் வேற்று பூமியை சேர்ந்தவன். நான் வெஸ்ட் பாம் பீச் பகுதியில் வசித்து வருகிறேன். எனது உடைகள் எங்கே போனது எனத் தெரியவில்லை" என்றும் தெரிவித்துள்ளார்.

> **நான் வேற்று பூமியை சேர்ந்தவன். நான் வெஸ்ட் பாம் பீச் பகுதியில் வசித்து வருகிறேன். எனது உடைகள் எங்கே போனது எனத் தெரியவில்லை" என்றும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அவரைக் கைது செய்த பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்**

இந்நிலையில் அவரைக் கைது செய்த பொலிஸார், இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வடகொரியா

கூகுளைப் பயன்படுத்திய அதிகாரிக்கு மரண தண்டனை

கூகுளைப் பயன்படுத்தியமைக்காக உளவுத் துறையைச் சேர்ந்த அதிகாரியொருவருக்கு வடகொரியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியாவில், வெளியுலகம் தொடர்பான தகவல்களை மக்கள் இணையத்தில் தெரிந்துகொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அண்மையில் அந்நாட்டின் உளவுத் துறை அதிகாரி ஒருவர் கூகுளைப் பயன்படுத்தி, ஜனாதிபதி கிம் ஜொங் உன் குறித்த தகவல்களைத் தேடி உள்ளார் எனவும்,இதனையடுத்து அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுமாறு ஜனாதிபதி கிம் உத்தவிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து

நியூசிலாந்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

நியூசிலாந்தின் கெர்ம்டெக் தீவுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று நேற்றைய தினம் (16) ஏற்பட்டுள்ளது.

பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ள இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 7.1ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்திற்கு சுனாமி அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்றும், நிலநடுக்கம் வலுவாக இருந்தால், மக்கள் வெளியேறத் தயாராக இருக்கவேண்டும் எனவும் அந்நாட்டின் தேசிய அவசரநிலை மேலாண்மை நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

> **பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ள இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 7.1ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் நியூசிலாந்திற்கு சுனாமி அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்றும், நிலநடுக்கம் வலுவாக இருந்தால், மக்கள் வெளியேறத் தயாராக இருக்கவேண்டும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது**

நேபாளம்

ஹேக் செய்யப்பட்ட பிரதமரின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கு

நேபாளத்தின் பிரதமரான புஷ்ப கமல் தாஹலின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கு ஹேக்கர்களால் ஹேக் செய்யப்பட்டு,முகப்பு புகைப்படம் மற்றும் முகப்பு முன்னுரை அனைத்தும் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஹேக் பிரதமரின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் கணக்கை மீட்கும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 17 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.